RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1349

# ஆற்றுப்படை நூல்களில் ஈகைக் கோட்பாடு

**அ. கீதா [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# The Doctrine of Charity in the Books of Aatruppatai

**A. Geetha [a, *]**

[a] Department of Tamil, Bishop Heber College, Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: geethasurya1795@gmail.com

Received: 02-06-2022
Revised: 28-08-2022
Accepted: 07-09-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

In the Aatruppatai texts, under the title of Eegai (Charity), it is examined how it has been developed from the position of the character to duty, with the change of meaning over time. It has been highlighted that hospitality is the foundation of Tamil culture. Out of the patthuppaattu, the information about the charity is discussed through the five Aatruppatai books: Thirumurukaatrupadai, Porunaratrupadai, Sirupanatrupadai, Perumbaanatrupadai, and Kootharaatrupadai, which is also known as Malaipadukadam, whereby poverty, on one hand, and prosperity, on the other, the unequal compromise that exists in society between the giver and the receiver, has been examined. It has been pointed out that the gift to the Panars differs from the gift given to the poets. It is summed up that the emperors, chieftains, and chieftains gifted them rich dresses, ornaments, their ruled kingdoms, towns, mountains, lotus made of gold, chariots, horses, elephants, and oxen, and food items to the people who came to them, and the ordinary people supplied food items and toddy in their possession in return. The Tamils who excelled in charity have been explained in detail.

**Keywords:** Suffering, Charity, Sharing, Morality, Grant.

## முன்னுரை

மனிதன் தான் கற்ற கல்வியையும், பெற்ற அனுபவங்களையும் போற்றிய விழுமியங்களையும் தன் வழித்தோன்றல்களுக்குக் கடத்த இலக்கியங்களைப் பயன்படுத்தினான். அவை கதைகள், பழமொழிகள், விடுகதைகள், பாடல்கள் என வாய்மொழி இலக்கியங்களாகவும், இலக்கண விதியின் படி அமைந்த வரிவடிவ இலக்கியங்களாகவும் மலர்ந்தன. அவ்விலக்கியங்கள் தான் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், பொருளாதார நிலை, சமூக நிலை ஆகியவற்றை உள்ளடக்கங்களாகக் கொண்டே இயற்றப் பெற்றன. அதனால் தான் இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றன. தமிழ் இலக்கியங்களும் அந்தந்த காலத்தின் சமூக நிலைகளை, மக்களின் எண்ண ஓட்டங்களைப் பிரதிபலிப்பவையாக உள்ளன. அவற்றுள் செவ்வியல் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் அகம், புறம் எனும் இரு பெரும் வாழ்வியல் நெறிகளைத் தெளிவுபடுத்துகின்றன. இல்வாழ்க்கை சார்ந்த தலைவன் தலைவியின் அன்பின் பாற்பட்ட காதல் வாழ்க்கையை அக இலக்கியங்களும், வீரத்தை மூச்சாகக் கொண்ட அக்கால மக்களின் மற உணர்வு மற்றும் தன்னொத்த சகமனிதனின் அழல் மிகுந்த வாழ்வின் துயர் போக்க விரையும் அறவுணர்வினைப் புற இலக்கியங்களும் எடுத்து இயம்புகின்றன. காதல் மற்றும் வீரத்தை இருவிழிகளாகப் போற்றிய தமிழரின் ஈகை உணர்வினை ஆற்றுப்படை நூல்களின் வழி உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஈகைக் கோட்பாடு

கோட்பாடுகளின் அடிப்படையில் உலக இலக்கியங்கள் ஆராயப்படும் பொழுது தமிழின் தனித்த கோட்பாடுகளாகத் திணைக்கோட்பாடு, அழகியல் கோட்பாடு, ஈகைக் கோட்பாடு, கூற்றுக்கோட்பாடு, அறக்கோட்பாடு, அறிவுத் தோற்றவியல் ஆகியவை தமிழ் அறிஞர்களால் ஆய்வுலகில் முன்னிறுத்தப்படுவதாக கூறுகிறார். ஈதல் என்ற சொல்லின் பொருளே கொடுத்தல் என்பதாகும். மனிதர்களின் எட்டு வகை மெய்ப்பாடுகள் ஆன நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகியவற்றைத் தொல்காப்பியர் பட்டியலிடும் போது அவை தோன்றும் நிலைகளன்களையும் கூறியுள்ளார். அங்ஙனம் கூறும்பொழுது பெருமிதம் தோன்றும் நிலைகளன்களாக,

"கல்வி தறுகண் இசைமை கொடை எனச்

சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்று கூறியுள்ளார். அதாவது ஈகை ஆகிய கொடையை அளிக்கும் போதும் மனிதனின் உணர்வாகிய பெருமிதம் தோன்றும் என்று விளக்கி உரைக்கின்றார் (Ilampuranar, 2005). இதன் மூலம் மனிதனின் உணர்வுகளோடு ஒன்றி இருந்த ஈகையின் சிறப்பை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. பெருமிதத்தைத் தோற்றுவிக்கும் கொடையின் சிறப்பை உணர்ந்தத் தமிழர்கள் அதை வாழ்வின் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதை,

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்

நீதி வழுவா நெறிமுறையின் மேதினில்

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்

பட்டாங்கில் உள்ள படி"

என்ற ஔவையின் வாக்கின்படி கொடுத்தலைக் கொண்டே கொடை அளித்தவரே மேலோர், தன்னலம் மட்டுமே பேணும், வறியவர்க்கு உதவாத குறுகிய உள்ளம் உடையோர் கீழோரினும் இழி குலத்தோர் என்பதை அறிய முடிகிறது. இவ்வாறும் மக்களை வகைபாடு செய்தல் தமிழ் கூறும் நல்லுலகில் நிலவியதாலேயே ஈகையை ஒரு தனி கோட்பாடாக முனைவர் நா.இளங்கோ முன்னெடுக்கிறார். மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவே ஆகும். வாழ்க்கைச் சக்கரம் சுழல்வதே உயிரினங்களின் உணவு வேட்கையைப் பூர்த்தி செய்யத்தான். வளமையும், வறுமையும் ஒருங்கே இருந்த சமூகத்தைத் தமிழிலக்கியங்கள் பல இடங்களில் காட்சிப்படுத்துகின்றன (Ilampuranar, 2005).

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே"

என்று நக்கீரர் கூறுவது போல் மனிதன் உயிர் வாழ உணவு இன்றியமையாததாகிறது. தனக்கு ஏற்பட்ட வயிற்றுப் பசியைத் தணித்துக் கொள்வதே உயிரினங்களில் அன்றாட வாழ்வின் இலக்காகவும் மாறுகிறது. இயற்கையை மட்டுமே உணவுத் தேவையை நிவர்த்தி செய்யும் களமாக நம்பியிருந்த வேட்டைச் சமூகம் ஆகிய இனக்குழு சமூகத்தில் உணவுப் பகிர்வு நடைமுறையில் இருந்தது (Avvai Duraisamy pillai, 2010). ஆனால், வேட்டையாடுதலைத் தாண்டியும் உணவுப் பயிரிடுதலை முதன்மையாகக் கொண்டிருந்த உடமைச் சமூகத்தில்,

"செல்வத்துப் பயனே ஈதல்"

என்று அடியோடு மாறியது (Avvai Duraisamy pillai, 2010). இனக்குழு சமூகத்தில் உணவுத் தேவைக்காக மட்டுமே சேகரிக்கப்பட்டது. ஆனால் உடமைச் சமூகத்தில் உணவு செல்வமாகப் பார்க்கப்பட்டு உபரியாகச் சேர்க்கப்பட்டது. இந்த உபரி உணவுச் சேகரித்தவனுக்கு பெருமையாக மாறியதை,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு"

என்று வள்ளுவர் அரசனுக்குரிய ஆறு அங்கங்களுள் ஒன்றாக உணவினைக் (கூழ்) குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது (Parimelalhagar, 2002). இவ்வாறு, உணவினைப் போலவே அக்காலத்தில் செல்வமாகப் பாவிக்கப்பட்ட மாடுகள், நாணயங்கள், நாடுகள், ஊர்கள், ஆகியவைப் பகிரப்பட்டன. ஆற்றொழுக்காகச் சமூகத்தின் சமநிலையைப் பேண, வறுமையில் வாடிய இல்லாதவர்களுக்கு வளமையில் ஓங்கியவர்கள் தம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து அளித்தனர். இவ்வாறாக, ஈகை இனக்குழு சமூகத்தின் வாழ்வின் அடிப்படைப் பண்பாகத் திகழ்ந்த நிலை மாறி, உடமைச் சமூகத்தில் அறங்களில் ஒன்றாகப் பரிணமித்தது.

“சங்ககாலம் என்பது இனக்குழுச் சமூகமாக வாழ்ந்த மக்கள் உடைமைச் சமூகமாக மாறிய காலகட்டம்” என்று நா. இளங்கோ கூறுகிறார். அவரது கூற்றை அடிப்படையாகக் கொண்டால் உணவைப் பகிரும் வேட்டைச் சமூகப் பழங்குடி வழக்கம் சங்க கால மன்னர்கள் மற்றும் குறுநில தலைவர்களிடம் எச்சமாக மிஞ்சி இருந்தது என்று அறியமுடிகிறது. இந்த உணவுப் பங்கீட்டில் கொடுப்பவன் - பெறுபவன் என்ற எந்த ஏற்றத்தாழ்வும் இல்லை. அதனாலேயே ஔவை,

“சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் மன்னே!

பெரிய கள் பெறினே

யாம்பாட தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே!

சிறு சோற்றானும் நனி பல கலந்தன் மன்னே!

பெருஞ்சோற்றானும்நனி பல கலந்தன் மன்னே!”

என்று அதியமானின் இறப்பை தாங்காது செயலற்ற கையறு நிலையிலும் அதியமானின் ஈகைச் சிறப்பைப் போற்றுகிறார். பண்பாக இருந்த ஈகை அறம் என மாற்றம் பெற்ற பின்பு அது பயனையும் கண்டது (Avvai Duraisamy pillai, 2010). இங்கனம், உடைமைச் சமூகத்தில் அறமெனக் கருதப்பட்ட ஈகை மறுமைக்குப் பயனாக மாறியதை,

“இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்

அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்”

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் ஏணிச்சேரி முடமோசியார் கூறுகிறார் (Avvai Duraisamy pillai, 2010). ஏற்றத்தாழ்வு மிக்க உடமைச் சமூக நிலையை,

“ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே

தாவென் கிளவி ஒப்போன் கூற்றே

கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே”

என்று தொல்காப்பியர் சூத்திரத்தின் மூலம் விளக்குகிறார் (Ilampuranar, 2005). இதன்மூலம், கொடையை வேண்டுவதற்கு பயன்படுத்தப்படும் சொற்கள் ஆகிய ஈ, தா, கொடு ஆகிய சொற்களைக் கூறுவோருக்கும் வரையறை இருந்ததைத் தொல்காப்பியர் நன்கு விளக்குகிறார். இதன் மூலம் அக்காலத்தில் ஒன்றைப் பெறுவதிலும் பெறுவோருக்கு இருந்த வகைமைப்பாட்டினை நன்கு அறிந்து கொள்ளலாம். “அன்பே ஈகைக்கு அடித்தளமாகும். அன்பில்லாத ஈகை வியாபாரமாகவே கருதப்படும்” என்று சி. மகேஸ்வரி தனது தினமணி கட்டுரையில் கூறுகிறார். அவரது கூற்றிற்கு அணி செய்யும் விதமாக சங்க காலத்தில் வழக்கில் இருந்த கொடைமடம் இருவகையாக அமைந்திருந்ததைச் சங்க இலக்கியங்களே விளக்குகின்றன. சங்ககால மன்னர்கள் தன்னை நாடிவந்த பாணர்களுக்கும், புலவர்களுக்கும் அவர்தம் தேவைக்கு அதிகமாகவே வாரி வழங்கிய போதிலும், அதில் சிறு வித்தியாசம் இருந்தது. பாணர்களுக்கு பரிசில் அளிக்க தகுதிப்பேறு எதுவும் தேவையில்லை ஆனால், புலவர்களுக்கு அவர்களின் தகுதி அறிந்தே பரிசில்கள் அளிக்கப்பட்டன. இதை,

“ஒரு திசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்

பலரும் வருவர் பரிசில் மாக்கள்

வரிசை அறிதலோ அரிதே பெரிதும்

ஈதல் எளிதே மாவண் தோன்றல்

அது நற்கு அறிந்தனை யாயின்

பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே"

என்று கபிலர் மலையமான் திருமுடிக்காரிக்கு வழங்கும் அறிவுரையின் மூலம் அறியலாம் (Avvai Duraisamy pillai, 2010). புலவர்களுக்கு அளித்தல் என்பது வணிகத்தை ஒத்ததே. வளமை பெற வள்ளலை நாடிச் செல்லும் புலவன் அவ்வள்ளலின் புகழை அழியாத பாடல்களாக இசைத்து, வளமை பெறுகிறான். இங்கு மன்னனுக்கு புகழும், புலவனுக்கு வளமும் கிடைக்கின்றன. ஆனால், பாணர்களுக்கு அளிக்கும் கொடையானது 'கலைகளை வளர்த்தல்' என்னும் மாபெரும் நோக்கமாக விரிவடைகிறது. பாணன் பொருள் பெறுகிறான். மன்னன் மனம் மகிழ்கிறான். இதனை,

"வீறுசால் நன்கலம்

பிறிது ஒன்று இல்லை காட்டுநாட்டேம் என

மார்பிற் பூண்ட வயங்குகாழ் ஆரம்

மடைசெறி முன்கை கடகமொடு ஈத்தான்

எந்நாடோ என நாடும் சொல்லான்

யாரீரோ எனப் பேரும் சொல்லான்"

என்று தன் ஊர், பெயர் மறைத்து பாணர்க்கு ஈந்து மகிழும் கண்பீர்க்கோ பெருநள்ளியின் ஈகை புலவர்களுக்கு அளிக்கும் கொடையிலிருந்து மாறுபட்டது ஆகும் (Avvai Duraisamy pillai, 2010). ஆனால், புலவனின் தகுதி பேற்றைச் சோதிக்க அவன் இயற்றும் செய்யுள்களின் வாயிலாக அவனுக்கு பொருளை வாரி வழங்கும் மன்னனின் புகழ் வெளிப்படும். இதற்கு சான்றாக சேரர்களின் பெருமை பாடும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தைக் கூறலாம். அங்ஙனம், புலவர்களின் பாடல் வழியாக மன்னனின் புகழ் இலக்கியங்களில் நிலைத்து நிற்கின்றது. அன்பினால் பாணர்களுக்கும், துயரத்தில் வாடுபவர்களுக்கும் அளிக்கும் கொடையின் மூலமாக கொடை அளிப்போரின் புகழ் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது. அத்தகைய வரையறை அற்ற கொடை உணர்வினால் தான் குறுநில மன்னர்களையும், இனக்குழு தலைவர்களையும் 'கடையேழு வள்ளல்கள்' என்று தமிழர் கொண்டாடினர். அதனாலேயே,

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!"

என்று சிறுகுடி கிழான் பண்ணனைத் தமிழகத்தை ஆண்ட முப்பேரசுகளில் ஒன்றாகிய சோழ வம்சத்தின் அரசன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் போற்றுகிறான். இப்புகழ் பண்ணனுக்கு உரித்தாக்கியது அவன் புகழை மட்டுமே எதிர் நோக்காமல் வறுமையில் உழன்ற அனைவருக்கும் வரையாது வழங்கிய சிறப்பே ஆகும் (Avvai Duraisamy pillai, 2010).

பாணர்களின் பசி மற்றும் அவன் சுயத்தேவைகளை மட்டுமே கணக்கில் கொண்டு அளிக்கப்பட்ட ஈகை, புலவர்கள் என்றால் பசி மற்றும் தேவைகளோடு அவரது புலமையும் சோதிக்கப்பட்டே பரிசில் அளிக்கப்பட்டு அறத்தகுதி பெறுகிறது. இவ்வாறு அறவடிவம் பெற்ற ஈகை மனிதனின் பசியைப் போக்குதல் என்ற உயர் பண்பில் இருந்து மாறி, வலியுறுத்தப்படும் நோக்கில் இல்லறக் கடமையாகவும், இல்லறத்தானின் கடமையாகவும் மாறுகிறது. இதை,

"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்" (Mohan, 2007)

"பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு

காமர் பொருட்பிணி போகிய நங்காதலர்"

போன்ற சங்கப்பாடல்கள் ஈகை அறமாக மாறிய சூழலைச் சித்தரிக்கின்றன (Balasubramniam, 2004). களவுக் காலத்தில் தலைவன் பொருள்வயிற் பிரிதல் தலைவியைத் திருமணம் செய்வதற்கே. ஆனால், கற்புக் காலத்தில் தலைவன் மேற்கொள்ளும் பொருள்வயிற் பிரிவானது வறியவர்களுக்கு உதவுவதற்கே.

இவற்றினிலே மாறுபட்ட ஈகையின் அடிப்படை சாராம்சம் ஆகிய பங்கிடுதல் மற்றும் பகிர்தலையே ஈகை என்று ஆற்றுப்படை நூல்கள் விவரிக்கின்றன.

## உணவு

மனிதன் நாளும் இவ்வுலகில் நிலைத்து வாழவே விரும்புகிறான். அதற்கான சக்தியை அவன் உணவின் வாயிலாகவே பெறுகிறான். அவனின் அன்றாடத் தேவைகளில் முதன்மையாகவும் உணவே திகழ்கிறது. மனிதனிடமுள்ள மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, காமம் ஆகிய பத்தும் பசி வந்தால் பறந்து போவதாக ஔவையார் நல்வழியில் கூறுகிறார்.

வரலாற்றை ஆராயும்போது மனிதர்கள் இரண்டு முறைகளில் உணவைப் பெற்றுள்ளனர். ஒன்று வேட்டையாடுதல், மற்றொன்று விவசாயம் செய்தல். இரு வகை உணவுகள் அன்று முதல் இன்று வரை புழக்கத்தில் உள்ளன. அவை செடி, கொடி, தாவரங்கள், காய்கறிகள், கிழங்கு வகைகள், இலைகள், தண்டு, வேர், பழங்கள் ஆகியவற்றைக் கொண்டு சமைக்கப்பட்ட சைவ உணவுகள் இறைச்சி முட்டை கடல் உணவுகளை உள்ளடக்கிய அசைவ உணவுகள் இருவகை உணவுப் பழக்கமும் தமிழரிடம் இருந்தன. ஐவகை நில மக்களும் அந்தந்த இயற்கைச்சூழலில் தங்களுக்கு கிடைத்த பொருட்களை உணவாகப் பக்குவப்படுத்தி உண்டனர். பொரித்தல், அரைத்தல், கலக்குதல், வாட்டுதல், வறுத்தல், உப்பிடுதல், ஊறவைத்தல், அவித்தல், புழுக்குதல், பிழிதல், நொதித்தல் ஆகியவை சங்ககால மக்களின் உணவு பக்குவப்படுத்தும் முறைகளாக உணவே மருந்து என்னும் கட்டுரையில் நா. செல்லம், ச. உமா மகேஸ்வரி ஆகியோர் கூறியுள்ளனர்.

“துராஅய் துரற்றிய துருவையம் புழுக்கின்

பராஅரை வேலை பருகென தண்டிக்

காழிற் சுட்ட கோழுன் கொழுங்குறை

யவையவை முனிகுவ மெனினே”

கரிகாலன் பொருநனுக்கு செம்மறியாட்டுக்கறி, ஆட்டின் கால்தொடையை புழுங்கிய வேலை, சுட்ட கரித்துண்டுகள் ஆகியவற்றை உண்ண அளித்தான். அவை அளித்தபின் அரிசிச் சோற்றோடு பல வகை காய்கறிகள் பொரித்த உணவை பொருநனுக்கு இரவும் பகலும் அளித்ததாகப் பொருநராற்றுப்படை கூறுகிறது (Mohan, 2007).

மூவேந்தர் மற்றும் கடையேழு வள்ளல்களின் வள்ளல் தன்மையைப் பாராட்டும் சிறுபாணாற்றுப்படை அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த வரலாற்றைக் கூறுகிறது. நல்லியக்கோடன் நாட்டு மக்களும் நல்லியக்கோடனைப் போன்றே விருந்தோம்பலில் தலைசிறந்தவர்கள் என்று கூறும் சிறுபாணாற்றுப்படையில் புளிக்கறியிட்ட ஊண்சோறும், மருதநிலத்தில் நண்டு கலவையோடு வெண்சோறும் நெய்தல் நிலத்தில் கடலில் கிட்டும் குழல்மீன், கருவாடு ஆகியவற்றோடு கள்ளும் உண்ணக் கிடைக்கும் எனப் பட்டியல் இடுகின்றது.

பெரும்பாணாற்றுப்படை ஐந்நில மக்களின் உணவுப் பகிர்தலை நிரல்படுத்துகின்றது. எயிற்றியர் குடிலில் சுடுசோறு, கருவாடு, கானவர் குடிலில் உடும்புக்கறிப் பொரியல், குறவர்களின் குடிலில் தோப்பி எனும் கள், ஆட்டுக்கறி, ஆயக்குடியில் பாலுடன் திணைச்சோறு, வரகுச்சோறு, அவரை விதையின் பருப்போடு சமைத்த “முரல்” எனும் உணவு, உழவர் மனையில் பெடைக்கோழிக்கறியுடன் கரும்புச்சாறு, அந்தணர் இல்லத்தில் மாவடு ஊறுகாய், மிளகு, கறிவேப்பிலை தூவி வெண்ணெய்யில்

பொரித்த மாதுளங்காய், தோப்பு வீடுகளில் வாழைப்பழம், இளநீர், நுங்கு, சேப்பங்கிழங்கு எனப் பலவகை உணவுகள் தொண்டைமான் இளந்திரையனைக் காணச் செல்லும் வழியிலேயே கிட்டும் என்கிறது பெரும்பாணாற்றுப்படை.

“வல்லோன் அட்டபல் ஊன் கொழுங்குறை

அரிசெத்து உணங்கிய பெரும் செந்நெல்லின்

நெறிகொள் அரசில்திரள் நெடும் புழுங்கல்

அரும்கடி தீம்சுவைஅமுதொடு பிறவும்”

இவற்றுக்கெல்லாம் மேலாக அரசன் பீமபாகம் ஒத்த சமையலில் வல்லோன் சமைத்த ஊண்சுவை அடிசில், நெற்சோறு எனப் பல உணவுகளை அளித்து உபசரித்ததாகப் பெரும்பாணாற்றுப்படைச் சான்றுடன் பகர்கிறது. நன்னனின் மலையில் மூங்கில் குழலில் ஊற்றப்பட்ட நெல்லிலிருந்து வடித்த கள், கடமான், சதை, பன்றி இறைச்சி உடும்புக்கறி புளி, மோர் கலந்த மூங்கிலரிசி, புளியங்கூழ், பாற்சோறு ஆகியவை கூத்தர்களுக்கு உணவாகக் கிட்டும் என்று மலைபடுகடாம் கூறுகிறது (Mohan, 2007).

## ஆடை ஆபரணங்கள்

உணவினைத் தொடர்ந்து மனிதனின் இன்றியமையாத தேவைகளுள் ஒன்று உடை. விலங்குகளிடமிருந்து மனிதனை மேம்பட்டவன் ஆக காட்ட உதவும் முக்கியக் காரணி உடையே ஆகும் உடை ஒரு சமூகத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் குறியீடாக விளங்குகிறது. சங்ககால மக்கள் பட்டு, பருத்தி, எலிமயிர் ஆகியவற்றால் ஆன ஆடைகளையும் தழையாடையையும் அணிந்தனர்.

சங்ககால மக்கள் இருபாலரிடமும் ஆபரணங்கள் அணியும் வழக்கம் இருந்தது. ஆண்களின் கழலும் பெண்களின் தொடியுமே முதன்மை அணிகலன்களாகத் திகழ்ந்தன. கழல் வீரத்தையும், தொடி மங்கலத்தையும் உணர்த்தும் குறியீடுகள் என்று சங்ககால மக்கள் நம்பினர். ஆகவே அணிகளும் கொடையாக. அளிக்கப்பட்டன. பொருநராற்றுப்படையில் கரிகாலன் தன்னை நாடி வந்த பொருநர்களை உறவினராகப் பாவித்து அவர்கள் அணிந்து இருந்த நைந்துபோன ஆடைகளை நீக்கி,

“நோக்குநுழை கல்லார் நுண்மைப்பூக்களிந்

தரவுரியன்ன வறுமைநிலை நல்கி

மழையென மருளுமகிழ்செய் மாடத்”

இழையின் செல்வழி அறிய வண்ணம் பூவேலைப்பாடு மிக்க பட்டாடையை அளித்ததான் (Mohan, 2007). பின், பொருநர்கள் விடை பெறும்போது

“பெரியகைத் தன்ன வேடி ராமரை

சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி

நூலின் வலவா நுணங்கரின் மாலை

வாலொளி முத்தமொரு பாடினி யணியக்”

பொற்றாமரை, அரில் மாலை எனப்படும் தங்கத்தால் கோர்க்கப்பட்ட முத்துமாலை மற்றும் பலவகை அணிகளையும் அளித்தான் (Mohan, 2007).

“கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்”

என்று மழையைக் கண்டு மகிழ்ந்து தோகை விரித்த மயில் குளிரால் நடுங்குவதாக எண்ணி போர்வை போர்த்திய பேகனையும் (Mohan, 2007),

"நீல நாகம் நல்கிய கலிங்கம்

ஆல் அமர்செல்வர்க்கு அமர்ந்தனன்"

நீலமணியையும் நாகம் அளித்த ஆடையையும் சிவனுக்கு அளித்த ஆய் அண்டிரனையும் (Mohan, 2007),

"காம்பு செறித்தன்ன அறுவை உடீஇ"

மூங்கிலின் பட்டையை உரித்ததைப் போன்ற மென்மையான ஆடைகளையும் சாலிங்கம் தோய்த்த போர்வை ஆகியவற்றையும் இரவலர்களுக்கு அளித்த நல்லியக்கோடனையும் சிறுபாணாற்றுப்படை புகழ்கிறது. அதேபோல பெரும்பாணாற்றுப்படையிலும் அரசன் பாணனின் பழைய ஆடையை விலக்கி, புத்தாடை அளித்து பொற்றாமரை மற்றும் அணிகளையும் வழங்கினான் (Mohan, 2007).

## தேர்

நெடுந்தேர், பொற்றேர், கொடிஞ்சி நெடுந்தேர், கொடித்தேர் என்றெல்லாம் சங்க இலக்கியங்களில் தேர் அழைக்கப்பட்டது. தேர்களில் குதிரைகள் மற்றும் எருதுகள் பூட்டப்பட்டன. தேர் அரசனுக்கு உரியது. இதை,

"படையும் கொடியும் குடையும் முரசும்

நடை நவில் புரவியும் களிறும் தேரும்"

என்று தொல்காப்பியம் கூறுகின்றது (Ilampuranar, 2005). ஆயினும், அரசருக்கு உரியதாகிய தேர் சாமானிய மக்கள் நூல்களில் பாணர்கள், பொருநர்கள் பரிசிலாக பெற்றதைப் பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றன.

"கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்

ஊட்டி உளை துயல்வர, ஓரி நுடங்கப்

பால்புரைப் புரவி நால்கு உடன் பூட்டிக்"

யானை தந்தத்தால் செய்த கொடுஞ்சி எனும் தேரை பொருநர்களுக்கு கரிகாலன் வழங்கினான் என்கிறது பொருநராற்றுப்படை. பாரி முல்லைக்குத் தேர் ஈந்ததைச் சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது (Mohan, 2007).

## விலங்குகள்

ஆதிகால மனிதன் வேட்டைச் சமூகமாக இருக்கும் பொழுதே விலங்குகளை வளர்க்கக் கற்றுக்கொண்டான் நாய்கள் பெரிதும் அவனது வேட்டைக்கு உதவின. மலைகளில் இருந்து ஆற்றங்கரைகளையும், சமவெளிப் பகுதிகளையும் நோக்கி குடிபெயர்ந்த மனிதன் பின் தன்னுடைய தொழிலாகிய விவசாயத்திற்கு உதவும் வண்ணம் மாடுகள், ஆடுகள் ஆகியவற்றை வளர்க்கத் தொடங்கினான். பின் அவன் வளர்க்கும் விலங்குகளின் பட்டியலில் மான்கள், யானைகள், குதிரைகள், பூனைகள் ஆகியவையும் இணைந்தன. இங்கனம் யானைகள், குதிரைகள், எருதுகள் ஆகியவை அரசர்களால் பரிசிலாக அளிக்கப்பட்டன.

"துடியடி யன்ன தூங்குநிலைக் குழவியொடு

பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்"

ஆண் யானைகள், பெண் யானைகளை அதன் கன்றுகளோடு கரிகாலன் பரிசு அளித்தான். குதிரைகளைக் காரியும் யானைகளோடு குதிரைகளையும் யானைகள், குதிரைகளை அதன் பாகர்களுடன், எருதையும் நல்லியக்கோடன் பரிசிலாக அளித்ததை சிறுபாணாற்றுப்படையும், மலை போன்ற யானைகள், மணிகள் பூட்டிய மாடுகள் மற்றும் குதிரைகளை நன்னன் கூத்தர்களுக்கு பரிசளித்ததை மலைபடுகடாம் கூறுகிறது (Mohan, 2007).

## நாடுகள், மலைகள், ஊர்கள், வயல்கள்

தன்னை நாடி வந்த பாணர்கள், பொருநர்கள், விறலியர் ஆகியோருக்கு அரசன் தன் நாட்டு ஊர்களையும் பரிசளித்தான்.

“தண்பனைதழீஇய தளரா விருக்கை

நண்பல்லூர நாட்டொடு நன்பல்”

பரிசிலாக நீர்வளம் மிக்க நன்செய் நிலங்களைப் பாணர்களுக்குக் கரிகாலன் அளித்தான். சிறுபாணாற்றுப்படையும் குதிரைகளோடு நாட்டை அளித்த காரி, தன் மலைகளைக் கூத்தர்களுக்கு அளித்த ஓரி ஆகியோரைப் பற்றி கூறுகிறது (Mohan, 2007).

## அருள்

திருமுருகாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாக முருகன் திகழ்வதால் அருள் அவனது செல்வமாக அறியப்படுகிறது. அவனது அருட் செல்வத்தின் பயனை நக்கீரர் நன்கு திருமுருகாற்றுப்படையில் விளக்குகிறார். முருகனின் சிவந்த திருவடிகளைக் கண்டு தொழுதால் முக்தி கிட்டும்.

“சேவடி படரும் செம்மல் வெள்ளமொடு

நலம்புரி கொள்கை புலம்புரிந் துறையும்”

முருகனின் திருவடி ஞானத்திற்கு வழிவகுக்கும். பிறவிப்பிணி அறுக்கும் என்றெல்லாம் கூறி அத்தகைய அருட்செல்வத்தைப் பெற முருகன் உறையும் அறுபடை வீடுகளையே வழியாக நக்கீரர் கூறுகிறார். பொருட்செல்வத்தின் பயன் அனைவரும் அறிந்ததே. ஞானம் பெறல், முக்திபெறல் ஆகியவை அருட்செல்வத்தினால் கிட்டும் பயன்களாக நக்கீரர் கூறியுள்ளார் (Azhwargal Aaivu Maiyam, 1995).

## பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் ஈகை

தமிழ்ச்சமூகம் உடைமைச் சமூகமாக மாறிய பின் அறமாக மாறிய ஈகையைப் புரியுமாறு சங்க இலக்கியங்களைப் பின்தொடர்ந்து வந்த அற இலக்கியங்களும், பக்தி இலக்கியங்களும், காப்பியங்களும், வலியுறுத்துகின்றன.

“வறியவருக்கு ஒன்று ஈவதே ஈகை மற்றுஎல்லாம்

குறியெதிர்ப்பை நீரது உடைத்து”

என்று வள்ளுவர் எவ்விதக் கைம்மாறும் கருதாது செய்வதே ஈகை என்கிறார் (Parimelalhagar, 2002). இதை நாலடியார்,

“நடுவூருள் வேதிகை சுற்றுக் கோள் புக்க

படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்

குடிகொழுத்தக்கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்

இடுகாட்டுள் ஏற்றைப் பனை”

என்கிறது (Gowmareeswari, 2010). முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரமோ வரந்தரு காதையில்,

"தானம் செய்மின் தவம்பல தாங்குமின்"

தானம் புரியுமாறு இளங்கோவடிகள் கூறுகிறார் (Venkatasamy Nattar, 2018). கணவனின் பிரிவை காட்டிலும் கண்ணகிக்கு பெரும் துன்பம் எது என்பதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பின்வருமாறு கூறுகிறார் (Venkatasamy Nattar, 2018).

"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

கோவலன் பிரிவின் பொழுது கண்ணகி ஈகை அறத்தைப் புரியாது இருந்ததையும், விருந்து எதிர்கொள்ளாது இருந்ததுமே கோவலன் தனக்கு அளித்த மிகப் பெரும் துயரங்கள் ஆகக் கோவலனிடம் கூறுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார் (Venkatasamy Nattar, 2018).

மணிமேகலை முழுவதும் பசிப்பிணி போக்குதலே பாடுபொருளாக அமைந்துள்ளது. ஈகை உணவுப் பகிர்தல் என்ற பொருண்மையில் பிற்காலத்தில் மக்களால் பின்பற்றப்பட்டது. பக்தி இயக்கக் காலங்களில் அற உணர்வு இறை உணர்வோடு சங்கமித்ததை அப்பூதி அடிகள் அறச்சாலைகள், தண்ணீர்பந்தல்களுக்கு அப்பர் பெயர் சூட்டியதன் மூலம் அறியலாம். இளையான்குடி மாறநாயனார் வறுமையுற்ற போதும் சிவனடியாருக்கு அமுது படைக்க. பகலில் நிலத்தில் விதைத்த விதை நெல்லையும், வீட்டின் மேல் சிதிலமடைந்த விரகு கட்டையும் பயன்படுத்தி உணவு படைத்ததாகவும் பெரிய புராணம் கூறுகிறது. திருமங்கையாழ்வார் களவுத் தொழில் புரிந்து அறச்சாலைகள் நிறுவி அறம் புரிந்ததை வைணவ இலக்கியங்கள் நமக்கு தெரிவிக்கின்றன.

அதன் பின் சோழர்கள் பிற்கால பாண்டியர்கள் மற்றும் நாயக்கர்கள் காலத்தில் ஈகை அறம் மிகவும் இறுக்கம் அடைந்து நிர்வாகமயம் ஆகியது. கோயில்கள் மற்றும் பிராமணர்களுக்கே நில தானங்கள் அளிக்கப்பட்டன. ஆயினும் வணிகத்தின் பாற்பட்டும், தமிழ்ப்பற்றினாலும் புலவர்களைப் பேண அரசர்கள் தவறவில்லை. ஆனால் பாணர்கள், பொருநர்கள், கூத்தர்கள், விறலியர் போன்ற கலைச்சமூகம் போற்றப்பட்டதற்கான சுவடுகளும் கிட்டவில்லை.

## முடிவுரை

சங்க காலத்தில் பல வகைகளிலும் செழித்திருந்த ஈகை பிற்காலங்களில் அரசியல் ஆதரவின்றி விருந்தோம்பல் ஆக மட்டுமே இல்லங்களில் மையம் கொண்டதைத் தமிழ் இலக்கியங்களும் பிற வரலாற்று ஆவணங்களும் உரைக்கின்றன. சங்க இலக்கியங்களில் ஆற்றுப்படை நூல்கள் ஈகையைச் சிறப்பிக்க எழுதப்பட்டவையாக அறியமுடிகிறது விளிம்புநிலை மாந்தர்களாக, தனக்கென நிலைத்த இடம் அற்றவர்களாக விளங்கும் பாணர் உள்ளிட்ட கலை சமூகத்தினர் அரசனை நெருங்கவும், அரசனுக்கே உரிய தேர், முத்துமாலை உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தவும் சங்ககாலச் சமுதாயம் நெகிழ்வுத் தன்மையுடன் இயங்கியது. பின்னரே இந்நிலை மாறியது. உணர்வினால் ஒன்றுபட்ட தமிழர்கள் பிறப்பினாலும், உடமைகளாலும் பிளவுபடுத்தப்பட்டதைத் தமிழ் இலக்கியங்கள் நன்கு உணர்த்துகின்றன. ஆற்றுப்படை நூல்களின் வாயிலாக அறியப்படும் மனித வாழ்வின் விழுமியமாகத் திகழ்ந்த ஈகைப் பண்பு பின் வந்த காலங்களில் அறமாக மாறி, விருந்தோம்பல் என்று செயல்வடிவம் பெறுகின்றதை ஆய்வுத் தரவுகள் உணர்த்துகின்றன. இக்கட்டுரையின் வழி பெறப்படும் தகவல்களைக் கொண்டு ஈகை அறமாக வலியுறுத்தப்படுவதன் தேவை, அரசர்களுக்கு நெருக்கமாக இருந்த பாணர், பொருநர் போன்ற கலைஞர்கள் பின்னாட்களில் பேசப்படாமைக்கான காரணம், அனைவருக்கும் அளிக்கப்பட்ட கொடை கோயில் மற்றும் பிராமணர்களுக்கு மட்டுமே உரியதாக மாறிய சூழல், செல்லுமிடங்களில் எளிதில் பெற்ற உணவு வணிக மயமாக்கப்பட்ட நிலை, எச்சமாக விருந்தோம்பல் உருப்பெற்ற விதம், அனைவருக்கும் பொதுவான சங்ககால வாழ்வியல் உடைமை அரசியலால்

இழந்தவை எனப் பல பொருண்மைகளில் எதிர்கால ஆய்வுக் களங்களை அமைத்து, ஆய்வு மேற்கொள்ள இக்கட்டுரை தளம் அமைத்து தருகிறது.

## References


Avvai Duraisamy pillai, S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Azhwargal Aaivu Maiyam, (1995) Thirumurugatrupadai, Mulai Nilaiyam, Chennai, India.

Balasubramniam, K.V. (2004) Natrinai Moolamum Uraium, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Gowmareeswari, S. (2010) Naladiyar Thelivurai, Saradha Pathippagam, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Mohan, Ra. (2007) Perumpanatrupadai Paathupattu, New Century Book House, Chennai, India.

Parimelalhagar (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Venkatasamy Nattar, Na.Mu. (2018), Silapathikaram Moolamum Uraiyum, 1st Edition, Gowra Agency, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License